# இயேசுவே வாரும்

காலேப் யோசுவா
☎ : 044 – 26490183
Cell : 9444701953

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*4/130, காந்தி தெரு, சென்னீர்குப்பம்,*
*பூந்தமல்லி, சென்னை* – 600 056.

## வேலிகளே பயிர்களை மேய்வது ஏனோ?

1. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான், கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும் எழுதுகிறதாவது ; நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

2. பிரியமானவர்களே, நீங்கள் உத்தமமானவைகளை ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமாய் பெருகவும், கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும், இடறலற்றவர்களுமாய் இருக்கவும் வேண்டுதல் செய்கிறேன். இந்நாட்களில் வேலிகள் பயிர்களை மேய்வதை இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள மக்கள் மத்தியில் காண்கிறேன். அதைப் பார்த்துக்கொண்டு என்னால் சும்மா இருக்க முடியுமா? முடியாது. வேலிகளையும் பயிர்களையும் எச்சரிக்க வேண்டியது என்மேல் விழுந்த கடமையாக இருப்பதால், இந்த செய்தித் தொகுப்பை உடன் எழுதவேண்டிய நிர்பந்தத்துக்குள்ளானேன். என்னை இந்த நிர்பந்தத்துக்குள் கொண்டு வந்த மும்பை சகோ. ஆபிரகாமுக்கு நன்றி தெரிவித்து, கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். மும்பை சகோ. ஆபிரகாம் 03.09.2007 அன்று காலை தொலைபேசியில் என்னோடு பேசி ***பதினோறாவது கட்டளையை*** தியானிக்க கேட்டுக்கொண்டார். அதன் விளைவே இந்த செய்தி தொகுப்பு.

3. *ஜெபர்சன்வில்லிலுள்ள வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ்-குள் சாத்தான் புகுந்தான்* – Satan entered into Voice of God Recordings, Jeffersonville என்ற தலைப்பில் அக்டோபர் 2004–ல் ஒரு செய்தித் தொகுப்பு எழுதியிருந்தேன். அதன் அடக்கமாவது: 2004, ஆகஸ்ட் மாதம் 18–ம் தேதி மாலை இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ளவர்களில் என்னை அதிகமாக நேசிக்கும், சென்னை பம்மல் சகோ. அந்தோணிதாஸ் அவர்கள் இல்லத்திற்கு சென்றிருந்தேன். கணவனும் மனைவியும் ஆவிக்குரியவர்கள். ஒரு ஆவிக்குரிய குடும்பம். பொதுவாக நான் இவர்கள் இல்லத்திற்கு மாதம் ஒருமுறை மாலை 4.30 மணியளவில் செல்வது வழக்கம். சகோ. அந்தோணிதாஸ் மற்றும் சகோதரி குளோரி இருவரும் இரவு சுமார் 9.00 மணிவரைக்கும் என்னோடு அமர்ந்து அநேக ஆவிக்குரிய காரியங்களை, இக்காலத்திற்குரிய செய்திக்கடுத்த காரியங்களை, நமது மத்தியிலுள்ள சபைக்கடுத்த காரியங்களை பகிர்ந்துக்கொள்வது வழக்கம்.

4. அன்றைத்தன்று நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் வேளையில், 1 தெச 4:16,17 வசனங்களில் கூறப்பட்டுள்ளபடி ***கர்த்தருடைய வருகை வந்தவிட்டது என்றதொரு உபதேசம்*** நம் மக்கள் மத்தியில் இருப்பதாகவும், அதற்கு ஆதாரமாக அவர்கள் *ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு*, பக்கம் 176, பத்தி 256–ஐ சுட்டிக் காட்டுவதாகவும் கூறினார்கள். அந்தப் பத்தியின் விபரம்: ***கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கிறவர்கள் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை. ஏனெனில் கடைசி எக்காளத்தில் தேவஎக்காளம் முழங்கும். கடைசி முத்திரை உடைக்கப்பட்டிருக்கும்பொழுது ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும்பொழுது கடைசி எக்காளம் முழங்கும். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள். உயிரோடிருக்கும் நாமும் அவர்களோடு கூட எடுக்கப்பட்டு அவரை ஆகாயத்தில் சந்திப்போம்*** என உள்ளது. இதை ஆதாரமாகக் கொண்டு ஏழாம் சபைக்காலத் தூதன் தன் செய்தியைக் கொடுத்துக்கொண்டிருக்கும்பொழுது தேவஎக்காளத்தோடு ***கர்த்தர் வானத்திலிருந்து இறங்கி வந்துவிட்டார்*** (1963, பிப்ரவரி 28–ம் தேதி, சூரியன் அஸ்தமிக்கும் நேரத்திற்கு சற்று முன்பாக காணப்பட்ட மேக வளையம்) என்ற உபதேசத்தைக் குறித்து தியானிக்கலானோம். இந்தப் பகுதியில் ***ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும்பொழுது கடைசி எக்காளம் முழங்கும் என்ற வார்த்தையில் எனக்கு முற்றிலுமாக ஆவியில் ஒருமனப்பாடு அந்தச் சமயத்தில் ஏற்படவில்லை.*** ஆதலால் அது குறித்து நான் அடுத்த முறை அவர்களைச் சந்திக்கும்போது பேசலாம் எனக் கூறிவிட்டேன்.

5. மறுநாள் எனது இல்லத்தில் இந்தப் பகுதியை திரும்பத்திரும்ப வாசித்துப்பார்த்தேன். ஆனாலும் எனக்கு அந்த வார்த்தையில் முற்றிலுமாக ஒருமனப்பாடு ஏற்படவில்லை. ஆவியின் வழிநடத்துதலும் இல்லை. ஏனென்றால் இந்த வார்த்தை தேவனுடைய வார்த்தையோடு இசைந்து போவதாக எனக்குத் தெரியவில்லை. 1967–ல் வெளியிடப்பட்டு, பின் 1993–ல் மறுப்பதிப்புச் செய்யப்பட்ட ***ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு*** (The Revelation of the Seven Seals) ஆங்கிலப் பிரதியை எடுத்து வாசிக்கலானேன். அதன் விபரம் : And even those who are alive and remain 'til His coming, shall not hinder those which are asleep. For the Trumpt of God shall sound, at that last Trumpt, When the last seal is broke, and when the Seventh Angel is giving his message, the last trumpet shall sound, and the dead in Christ shall rise. And we which are alive and remain shall be caught up together with them, to meet Him in the air. (The Revelation of the Seven Seals, reprinted in 1993, page 93 & 94 Para 256)

6. *வாய்ஸ் ஆப் காட்*, தீர்க்கதரிசியின் செய்தி டேப் என்ன கூறுகிறதோ அதையே ஆங்கிலத்தில் புத்தகவடிவில் கொண்டுவருகிறார்கள். ஆங்கில புத்தகத்திலுருந்து தமிழில் மொழிபெயர்க்கிறார்கள். ஆக ஆங்கிலப் புத்தகத்திலும் தமிழ் புத்தகத்திலும் இந்த வார்த்தை சரியாகவே உள்ளது. ஒன்றுக்கொன்று முரண்பாடு கிடையாது. இப்படியிருக்க ஏன் எனக்கு அதில் ஆவியின் வழிநடத்துதல் இல்லையென்று எண்ணினேன். சிந்தித்தேன். முடிவாக கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்தேன். ஆனால் ஒன்று நிச்சயமாக ஏழாம் சபைக்காலத் தூதன் இவ்வாறு பிரசங்கித்திருக்க முடியாது என்ற உணர்வு என் உள்ளத்தின் ஆழத்திலிருந்தது இது கூடுமானால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதான கொடிய வஞ்சிப்பின் காலம். ஆனால் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் நிச்சயமாக 100% வஞ்சிக்கப்பட முடியாது என்பதையும் நன்கு அறிந்தவனாயிருக்கிறேன்.

7. ஒருபுறம் மனது ஆங்கிலத்திலும், தமிழிலும் சரியாகத்தானே இந்த வார்த்தையுள்ளது. பின் ஏன் மனதைப் போட்டுக் குழப்பவேண்டும்? ***கர்த்தர் வந்துவிட்டார்*** என்ற உபதேசத்தைக் கொண்டு வந்தவர்கள் இந்த வார்த்தையை முற்றிலுமாக விசுவாசிக்கிறார்கள், உபதேசிக்கிறார்கள். நாமும் இந்த வார்த்தையை அப்படியே ஏற்றுக்கொண்டு ***கர்த்தர் வந்துவிட்டார்*** என்று விசுவாசிக்க வேண்டியது தான் என்ற எண்ணம் எழுந்தது.

8. மறுபுறம் இந்த வார்த்தையில் ஏதோ தவறு உண்டு. நிச்சயமாக சகோ. பிரன்காம் இவ்வாறு பிரசங்கித்திருக்க முடியாது. அவர் இவ்வாறு பிரசங்கித்திருப்பாராகில் அவருடைய செய்தியில் ஏதோ தவறு உண்டு. ஆதாலால் இதை மேலும் நிதானமாக, பொறுமையாக தியானிக்க வேண்டும் என்று முடிவு எடுத்தேன்.

9. இவ்வாறாக நான் ஆழ்ந்த சிந்தனையிலிருந்து கொண்டிருந்த வேளையில், ஒரு எண்ணம் என் உள்ளத்தில் உதித்தது. தேவன் என்னோடு இடைபடலானார். அதாவது தீர்க்கதரிசி செய்தி டேப் என்ன சொல்லுகிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள் என்று நமக்கு அறிவுரை கூறியுள்ளாரேயன்றி, செய்திப் புத்தகங்கள் என்ன கூறுகிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கூறவில்லை. ஆதலால் இந்தப் பகுதி குறித்து செய்தி டேப் என்ன கூறுகிறது என்று பார்ப்போம் என ஒரு முடிவு எடுத்தேன்.

**10.** ***நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் கவனமாகக் கேட்டு அதைப் பற்றிக்கொள்ளுங்கள். இதை நீங்கள் ஒலிநாடாக்களில்*** (Tapes) ***பதிவு செய்தால், ஒலிநாடாக்களிலுள்ள போதனையில் நிலைகொண்டிருங்கள். ஒலிநாடாக்கள் கூறியதை தவிர வேறொன்றையும் கூறாதீர்கள். ஒலிநாடாக்கள் சொல்கிறதை மாத்திரம் சொல்ல ஜாக்கிரதையாயிருங்கள். பாருங்கள்? இப்பொழுது, ஏனெனில் நாம் முழுமையாகப் புரிந்துகொள்ளப்போகும் காரியங்கள், தவறாகப் புரிந்துக்கொள்ளப்படலாம். பாருங்கள்? ஒலிநாடாக்கள் சொல்லுவதையே சொல்ல நிச்சயமுள்ளவர்களாயிருங்கள். வேறொன்றையும் சொல்லாதீர்கள். பாருங்கள்? இதை நான் என் சுயமாய் சொல்லவில்லை. தேவன் தான் இதைக் கூறுகிறார். ஒலிநாடாக்கள் சொல்லாததைச் சொல்வதன் மூலம் அநேக சமயங்களில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. அநேகர் எழுந்திருந்து இதற்கு இது தான் அர்த்தம் என்று இன்னார்... இன்னார் கூறினார் என்று கூறுகின்றனர். ஒலிநாடாக்கள் சொல்லுவதை அப்படியே ஏற்றுக்கொண்டு அதோடு விட்டுவிடுங்கள். பாருங்கள், அவ்விதமாகவே வேதம் கூறுவதை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளுதல் அவசியம். உங்கள் சொந்தக்கருத்தை அத்துடன் சேர்க்காதீர்கள். ஏனெனில் வேதம் ஏற்கனவே வியாக்கியானம் செய்யப்பட்டதாகிவிட்டது (ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு - புதிய பதிப்பு, பக்கம் 30, பத்தி 106, 107)***

11. நான் செய்தியின் பிரகாரமாக செய்தி டேப் போட்டுக் கேட்டபோது அது முற்றிலும் மாறாக இருந்தது. உள்ளத்தில் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினேன். ஒரு பரவசம் என் உள்ளத்தில் மகிழ்ச்சியினால் உண்டாயிற்று. செய்தி டேப் இவ்வாறாகக் கூறியது: When the seventh angel has given his message. உடனே ***ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு*** பழைய ஆங்கிலம் மற்றும் பழைய தமிழ் பிரதிகளை எடுத்தேன். ஆங்கில பிரதியில் When the seventh angel has given his message என இருந்தது. தமிழ் பிரதியில் ***ஏழாம் தூதன் தன் செய்தியை அளித்த பின்னர்*** என இருந்தது. ஆக ***வாய்ஸ் ஆப் காட்***க்குள் புதிய பதிப்பு என்பதன் பேரில் சாத்தான் புகுந்துவிட்டான் என்பதை கர்த்தர் வெளிப்படுத்தினார். அடுத்து C.D-யிலிருந்து இந்தப் பகுதியை எடுத்தேன். அதில் கூட செய்தி டேப் கூறியவண்ணமாகவே When the seventh angel has given his message என இருந்தது.

12. ஆக பிரியமானவர்களே நமது எதிராளியாகிய சாத்தானானவன் ***வாய்ஸ் ஆப் காட்***, ஜெபர்ஸ்சன்வில், இந்தியானா, அமெரிக்கா மூலம் செய்திலுள்ள மக்களை வஞ்சித்து வருகிறான் என அறியவந்தேன். தேவனுடைய சத்தத்திற்கு பதிலாக சாத்தானுடைய சத்தம் கேட்கப்பட்டு பிரிண்ட் செய்யப்படுவதை அறிந்து கொண்டேன். சாத்தான் மறுபதிப்பு (Reprint) எனக் கூறி வாய்ஸ் ஆப் காட்க்குள் தில்லுமுல்லுகள் செய்ய ஆரம்பித்துவிட்டான். இனி இவர்களது ஆங்கிலச் செய்திப் புத்தகங்களை நம்புவது கூடாத காரியம். பாருங்கள் இவர்களது ***ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு, மறுபதிப்பினால் எத்தனையோ பேர் தவறான உபதேசத்தில் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என்று உபதேசிக்கிறார்கள்***. இன்னும் ஆங்கிலச் செய்திப் புத்தகங்களில் எத்தனைத் தவறுகள் உள்ளதோ? நிச்சயமாக கர்த்தர் தம்மால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு ஏற்றவேளையில் அனைத்து தவறுகளையும் வெளிப்படுத்திக்காட்டுவார். அல்லேலூயா!

13. இப்பொழுது ***சாத்தான் வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ்***-க்குள் இறங்கி, செய்தியை எவ்வாறு தாறுமாறாக்கிவிட்டான் என்பதை கவனியுங்கள். The Revelation of the Seven Seals புதிய ஆங்கில பிரிண்ட் 1993-ல் இதன் பக்கம் 93, பத்தி 256-ல் When the last seal is broke, and when the Seventh Angel has given his Message என்பது when the last seal is broke, when the Seventh Angel is giving his Message என முற்றிலுமாக அர்த்தம், பொருள் வேறுபடும் அளவுக்கு மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

14. அதாவது ***ஏழாம் தூதன் தன் செய்தியை அளித்த பின்னர் கடைசி எக்காளம் முழங்கும் என்பதை ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும் போது கடைசி எக்காளம் முழங்கும் என பிரிண்ட் செய்துள்ளார்கள். இதை தமிழில் ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு, புதிய பதிப்பு பக்கம் 176, பத்தி 256-ல் வாசிக்கலாம். ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும்போது, கடைசி எக்காளம் முழங்கும். கிறிஸ்துவுக்குள் மரித்தோர் எழுந்திருப்பார்கள். உயிரோடிருக்கும் நாமும் அவர்களோடு கூட எடுத்துக்கொள்ளப்பட்டு அவரை ஆகாயத்தில் சந்திப்போம்***. அதாவது ஏழாம் சபைக்கால தூதன் செய்திக்கு பின்னர் நடக்கவேண்டிய ஒரு சம்பவத்தை ஏழாம் சபைக்கால தூதன் செய்தி கொடுத்து கொண்டிருக்கும்போது நடக்கும் என தவறாக பிரிண்ட் செய்து உலகம் முழுவதிலும் செய்தியிலுள்ள மக்களை குழப்பத்துக்குள் கொண்டு வந்து, அவர்களை திசை திருப்புகிறார்கள். இவர்கள் செய்தியை பிரசுரித்துள்ளபடி ஏழாம் தூதன் செய்தியை அளிக்கும்போது கடைசி எக்காளம் முழங்கி எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்திருக்க வேண்டுமே? நடக்கவில்லையே! மக்களை சரியான பாதையிலிருந்து திசை திருப்புகிறவன் யார்? அவன் பிசாசு. இப்பொழுது இதை கொண்டு ஏழாம்சபைக்கால தூதன் தன் செய்தியை கொடுத்து கொண்டிருக்கும்போதே தேவ எக்காளம் ஊதப்பட்டு கர்த்தர் வானத்திலிருந்து 1963-ல் இறங்கி வந்துவிட்டார் என்ற உபதேசம் வெளிவந்தது. கர்த்தருடைய வருகை வந்துவிட்டது என பட்டாபிராம் பாஸ்டர் எட்வர்ட் அவர்களும், மரித்தோர் உயிர்த்தெழுதல் நடந்து கொண்டிருக்கிறது என

மும்பை பாஸ்டர் டேனியேல் கிறிஸ்டியான் போன்றவர்கள் உபதேசம் பண்ணினார்கள். அதோ நீக்ரோ பெண் உயிர்த்தெழுந்துவிட்டாள் என புகைப்படம் எடுத்து, அதை பிரசுரித்து மக்களை சாத்தான் ஏமாற்றினான். மும்பை சகோ. டேனியேல் கிறிஸ்டியானைக் கொண்டு சாத்தான் மக்களை வஞ்சித்தான். அவர் சாத்தானின் ஒரு கருவியாக இருந்தார்.

15. ஆனால் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இந்த கள்ள உபதேசத்திலிருந்து தங்களை பாதுகாத்துக்கொண்டார்கள். சாத்தான் கண்ணியிலிருந்து தப்பினார்கள். கர்த்தருடைய மந்தையில் இல்லாத வெள்ளாடுகள் இவர்கள் பின்சென்றனர். நடக்காத ஒன்றை நடந்துவிட்டதாக நம்பி மோசம்போனார்கள். இதற்குக் காரணம் யார்? ***வாய்ஸ் ஆப் காட் ரிக்கார்டிங்ஸ்தான்***. ஒரு கூட்டம் மக்களை படுகுழிக்குள் தள்ளிய தனிப்பெருமை இதனையே சாரும்.

16. கர்த்தர் எனக்கு கொடுத்த கிருபையின்படி மீண்டும் இரண்டாவது முறையாக ***வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ்க்குள்*** பிசாசானவன் எவ்வாறு இறங்கி ***கர்த்தர் உரைக்கிறார்*** என்ற தேவனுடைய சத்தத்திலிருந்து மக்களை திசை திருப்பினான் என்பதை ***ஐயோ, ஆபத்து! ஆபத்து!! வாய்ஸ் ஆப் காட் ரிக்கார்டிங்ஸ் பிசாசின் கண்ணியில் விழுந்ததே!*** என ஜனவரி 2006–ல் எழுதினேன். பல ஆண்டுகளுக்கு முன்பு கோல்டன் நெக்கெட்ஸ் (Golden Nuggets) என்ற புத்தகத்தில் கீழ்கண்ட தலைப்பில் ***கர்த்தர் உரைக்கிறார்*** என்ற பகுதியை வாசித்தேன். THERE'LL NEVER BE ANOTHER ON THE FIELD. This is the last time, because I'm leaving the country. There'll never be another on the field when I'm gone. "**Thus saith the Lord**." There has not been and will not be (**Uncertain sound** 15-4-1961, Bloomington, IL)

17. ஒரு முக்கியமான காரியம் குறித்து கர்த்தர் உரைக்கிறார் என்பது தேவசித்தம் ஆகும். கடைசி காலம், கடைசிகால சபை, கடைசி கால சபை தூதன், கடைசி செய்தி, கடைசி செய்தியாளன், இவைகளை மனதில் கொண்டு இந்த ***கர்த்தர் உரைக்கிறார் என்ற தேவசித்தம்*** முற்றிலும் சரியானது என ஆவிக்குள் உணர்ந்தேன். அதில் கடுகு அளவு கூட என் உள்ளத்தில் சந்தேகம் பிறக்கவில்லை. அதை அப்படியே ஏற்றுக்கொண்டேன். ஆனால் ***கர்த்தர் உரைக்கிறார் என்ற தேவனுடைய சத்தத்தை*** உரைக்கப்பட்ட செய்தியிலும் உறுதிப்படுத்தவேண்டும் என்ற ஆர்வம் நீண்ட காலமாக என் உள்ளத்தில் இருந்து வந்தது. ஆனாலும் அதை உறுதிப்படுத்தும் முன்பே, ஏழாம் சபைக்கால தூதன் செய்திக்குப்பின்னர் இனி ஒரு தேவனுடைய மனுஷன் எழும்ப தேவையில்லை, எழும்பப்போவதுமில்லை என செய்தி தொகுப்புகளில் எழுதினேன். பிரசங்கித்து வந்தேன். ஏனென்றால் சகோ. பிரன்ஹாமுக்கு பிறகு சகோ. பாலாசீர் லாறி என்பவர் எழும்பி, அற்புத அடையாளங்களை நடப்பித்தார். தன்னை மனுஷகுமாரன் (The Son of Man) என அழைத்துக்கொண்டார். தன்னை பின்பற்ற ஒரு பெரிய கூட்டம் ஜனங்களை கவர்ச்சித்தார். முடிவில் அவர் அழிந்துபோனார். அவரை பின்பற்றிய அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள். அவமாய்போனார்கள்.

18. மேலும் வேலூர் சகோ. தாமஸ், சென்னை சகோ. ஜோசுவா கமாலியேல், புதுக்கோட்டை சகோ. ஜெயராஜ், மும்பை சகோ. டேனியேல் கிறிஸ்டியான் போன்ற கள்ள சகோதரர்கள் எழும்பி நீதியின் ஊழியக்காரனுடைய, ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொண்டு தங்களுக்கும் ஒரு பெரிய ஊழியம் உண்டு எனக்கூறி தங்களை மிகைப்படுத்தி, விளம்பரப்படுத்தி, பெரியவர்களாக காண்பித்தார்கள். இவர்கள் யாவரும் இக்காலத்திற்குரிய செய்தியை விசுவாசிக்கிறவர்கள் என்றே கூறினார்கள். ஆனால் ***கர்த்தர் உரைக்கிறார் என்ற தேவ சத்தத்திற்கு*** தங்கள் காதுகளை செவிடாக்கிக்கொண்டார்கள். பாருங்கள் இவர்கள் விசுவாசிக்கும் செய்தியை கொண்டுவந்த தீர்க்கதரிசி ***கர்த்தர் உரைக்கிறார்*** இனி எனக்குப்பிறகு களத்தில் யாரும் இல்லை எனக் கூறியபின், இவர்கள் தங்களுக்கு ஒரு ஸ்தானத்தை ஏற்படுத்த முயற்சித்தது ஏன்? சகோ. ஜோசப் பிரன்ஹாமுக்கும் ஒரு பதவியை சிலர் தேடுவது ஏன்? பாருங்கள் ***கர்த்தர் உரைக்கிறார் இனி எனக்குப் பிறகு யாரும் இல்லை*** என நீங்கள் விசுவாசிக்கும் தீர்க்கதரிசி தேவனுடைய சத்தத்தை உங்களுக்கு கொடுத்தபின் நீங்கள் அந்த சத்தத்திற்குப் புறம்பாக உங்களை மேன்மைப்படுத்துவது என்ன? வேறொருவரை எதிர்பார்ப்பது என்ன? ***கர்த்தர் உரைக்கிறார்*** என்று கூறிய பின் அதுகுறித்து நாம் வாய்திறந்து எதுவும் பேசக்கூடாதே! அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமே! வாய் திறப்பது உங்கள் அவிசுவாசத்தை தானே எடுத்துக்காட்டுகிறது? மேற்கூறியவர்கள் வார்த்தைக்குப் புறம்பாக உபதேசித்து வருவதால் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததால் இவர்களை ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்கள் என எழுதுகிறேன்.

19. ஆக முற்றிலுமாக இந்த ***கோல்டேன் நெக்கெட்ஸ்சை*** நம்பி இருந்துவிடக்கூடாது, தீர்க்கதரிசியின் செய்தியிலும் இதை கேட்டு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் என் உள்ளத்தில் இருந்துக்கொண்டு வந்தது. மேலும் இந்த செய்தி ஆங்கிலத்திலும் வரவில்லை. தமிழிலும் மொழிபெயர்க்கப்படவில்லை. ஆதலால் ஆங்கில செய்தி டேப்பில் இது குறித்து உறுதிப்படுத்த முடிவு செய்தேன். 16.03.2004 அன்று VGR சென்று அந்த செய்தி டேப் பெற்று வந்தேன். ***கோல்டன் நெக்கெட்ஸ்யில்*** நான் வாசித்தது சரியே என்று உறுதி செய்துகொண்டேன். ஆதாரத்துக்காக என்னோடு அதை தக்கவைத்துக்கொண்டேன். ஆனாலும் டேப்பை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று VGR-யிடமிருந்து எனக்கு நினைப்பூட்டும் கடிதங்கள் வந்துகொண்டிருந்தது. ஆனாலும் என் நிலையை அங்கு பணியில் உள்ள மேரி சகோதரியிடம் சொல்லி தட்டி கழித்து வந்தேன். இந்நாட்களில் கர்த்தருடைய வேளை வந்தது. எனக்கு தீர்க்கதரிசியின் அனைத்து பிரசங்கங்களையும் கொண்ட சி.டி. (CD) கிடைத்தது. ஆதலால் சி.டி–யிலிருந்து இந்த செய்தியை பிரிண்ட் எடுக்க முயற்சித்தேன்.அதற்கும் வேளை வந்தது. இக்காரியத்தில் என் மகன் ஒண்டர்புல் எனக்கு உதவினான். செய்தியை பிரிண்ட் எடுத்தேன். நான் அந்த செய்தியை வாசித்தபோது அதில் ***கர்த்தர் உரைக்கிறார்*** என்று கூறப்பட்ட அந்த **தேவசத்தம்** தலைகீழாக முற்றிலுமாக மாற்றப்பட்டு பிரிண்ட் இருந்ததைக் கண்டேன். அதாவது When I'm gone என்பது Till I'm gone என பிரிண்டில் இருந்தது.

20. பாருங்கள் தீர்க்கதரிசியின் பிரசங்கம் கீழ்கண்டவாறு : There'll never be another on the field when I'm gone, Thus Saith the Lord. There has not been and will not be. நான் சென்ற பிறகு இந்த களத்தில் ஒருபோதும் வேறொருவர் இருக்க போவது இல்லை. இது கர்த்தர் உரைக்கிறார். இதுவரை யாரும் இருந்ததில்லை, இனிமேலும் இருக்கப்போவதில்லை.

**21. *ஆனால் குட்டிச் சாத்தான், குள்ளநரி வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ்குள் நுழைந்து இந்த கர்த்தர் உரைக்கிறார் என்ற தேவனுடைய சத்தத்தை கீழ்கண்டவாறு மாற்றி அமைத்து விட்டான்.* There'll never be another on the field till I'm gone. *அதாவது நான் போகும் வரை இந்த களத்தில் வேறு யாரும் இருக்கபோவதில்லை. இது கர்த்தர் உரைக்கிறார் என்று மாற்றிவிட்டான். இதன்படி ஏழாம் சபைக்கால தூதன் செய்திக்கு பிறகு மற்றொருவர் எழும்பி பிரகாசிக்கலாம் என்பதாகும். ஆனால் சகோ. பிரன்காமுக்கு பின் வேறொருவர் இருப்பதில்லை, இது கர்த்தர் உரைக்கிறார் என்பதை சகோ. பிரன்காமுக்குப் பின் வேறொருவர் இருக்கலாம், இது கர்த்தர் உரைக்கிறார்* என பிசாசு *வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ் மூலம் மாற்றிவிட்டான். ஆவிக்குரியவர்கள் இது எவ்வளவு ஒரு பெரிதான பொய், கொடிதான வஞ்சகம் என்பதை அறிவார்கள்.***

22. ஆம் பிரியமானவர்களே, இது ஒரு கொடிதான வஞ்சிப்பின் காலம் என்பதை தீர்க்கதரிசியின் செய்திகளில் நீங்கள் தியானித்திருப்பீர்கள். அதை நான் மீண்டும் மீண்டும் உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். VGR ஐ முற்றிலுமாக நம்ப முடியவில்லை. இது ஏழாம் சபை தூதனுடைய பிரசங்கங்களை, அவர் பிரசங்கித்தப் பிரகாரமாக பிரிண்ட் செய்வதில்லை. அவருடைய பிரசங்கங்களை கூட்டியும், குறைத்தும் பிரிண்ட் செய்து வருகிறார்கள். அதை கர்த்தர் ஏற்ற வேளையில் தன்னுடைய மணவாட்டிக்கு வெளிப்படுத்தி வருகிறார். ஏனென்றால் அவளை யாரும் வஞ்சிக்க முடியாது. ஏமாற்ற முடியாது. VGR ஏழாம் தூதனுடைய சத்தத்தை ஒரிஜினல் டேப்களிலிருந்து அதில் எந்த விதமான மாற்றங்களும் இல்லாமல், அதை அப்படியே பிரிண்ட் செய்து உலகம் முழுவதும் விநியோகிக்கிறோம் என்கிறார்கள். ஆனால் அதை கூட்டியும் குறைத்தும் வெளியிடுகிறார்கள் என்பதை மேற்கண்ட இரு சாட்சிகள் மூலம் திருஷ்டாந்தப்படுத்த கர்த்தர் கிருபை செய்தார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். அல்லேலூயா! சகல காரியங்களும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும். 2 கொரி. 13:1. அது நிலைவரப்படுத்தப்பட்டது.

23. ***வாய்ஸ் ஆப் காட் ரெக்கார்டிங்ஸ்*** பிசாசின் கன்னியில் விழுந்துவிட்டதால் இனி அது வெளியிடும் ஏழாம் தூதன் சத்தத்தை ஆங்கில புத்தகங்களில் மற்றும் CD–யிலிருந்து தியானிக்கும்போது நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஒருவன் தேவனால் தொரிந்துக்கொள்ளப்படவில்லை என்றால் நிச்சயமாக இவர்களால் வஞ்சிக்கப்படுவான். ஆனால் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை இவர்கள் ஒருகாலும் வஞ்சிக்கமுடியாது.

24. வேலிகள் பயிர்களை மேயும் காலமாக இது இருக்கிறது. வேலிகளை நம்ப முடியவில்லை. ஆதலால் பயிர்கள் தங்களை தாங்களே பரிசுத்த ஆவியின் ஒத்தாசையினால் காத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறது. இக்காலத்திற்குரிய செய்தியை அது கொடுக்கப்பட்ட விதமாக கொண்டு வருகிறோம் எனக்கூறும் VGR–யை நம்ப முடியவில்லை நாங்கள் இக்காலத்திற்குரிய செய்தியை சுமந்துவருகிறோம் எனக்கூறும் பாஸ்டர்களையும் நம்ப முடியவில்லை. நீங்கள் சார்ந்திருக்கும் சபை அசுத்த ஆவிகளின் குடியிருப்பாக இருப்பதால் அதையும் நம்பமுடியவில்லை. ஆதலால் பிரியமானவர்களே, நீங்கள் தேவனை மட்டும் சார்ந்திருங்கள். அவரே உங்கள் நம்பிக்கை. அவரால் மட்டும் உங்களை இந்த வஞ்சக காலத்திலிருந்து தப்புவிக்க முடியும். ஆதலால் உங்கள் ஐக்கியத்தை பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் வைத்துக்கொண்டால் மாத்திரமே நீங்கள் உங்களை இந்த வஞ்சக உலகத்திலிருந்து, காலத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்.

25. ***அடுத்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி ஏழாம் சபைக்கால தூதனா அல்லது செய்தியா?*** என்ற தலைப்பில் பிப்ரவரி 2004–ல் ஒரு செய்தித் தொகுப்பு எழுதியிருந்தேன். அதின் சாராம்சம் கீழ்கண்டவாறு: VGRன் CATCH THE VISION வியாசம் (Article) 2–வது பக்கம் THE PILLAR OF FIRE என்ற தலைப்பின் அடியில் As John the Baptist forerun the first coming of Christ, you will forerun His second coming என எழுதப்பட்டு அங்கு சகோ. பிரன்காமின் புகைப்படம் காணப்பட்டது. இதுபோன்று ***சென்னை, மணவாட்டி கூடாரம்*** வெளியிட்ட ***மெய் விசுவாசம் நம் ஜீவியத்தை மாற்றும்*** என்ற சிறு புத்தகம் 14–வது பக்கத்தில் சகோ. பிரன்காம் புகைப்படத்தை பிரசுரித்து அதன் கீழ் ***அக்கினி ஸ்தம்பம்*** என்ற தலைப்பின் கடைசிப் பகுதியில் "***கிறிஸ்துவின் முதலாம் வருகையிலே முன்னோடியாக யோவான் ஸ்நானான் வந்தது போல, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலே நீ முன்னோடியாக இருப்பாய்***" என்று எழுதப்பட்டிருந்தது.

26. இந்த உபதேசம் வெளி. 10:6 வசனத்தையும், இக்காலத்திற்குரிய செய்தியையும் மறுதலிப்பதாக, புரட்டுவதாகக் கண்டேன். சகோ. பிரன்காம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி என்பது பிசாசின் ஒரு நயவஞ்சகமான உபதேசம். பிரியமானவர்களே சபையில் கள்ளப் போதகர்கள் உண்டு. 2 பேது 2:1. ஆதலால் அவர்களைக் கொண்டு தந்திரமான போதகங்களும் உண்டு. எபே 4:14. இவர்கள் வேதப்புரட்டுகளைத் தந்திரமாக நுழையப் பண்ணுகிறார்கள்.

27. இந்த எழுத்துக்கள், உபதேசங்கள் வேதப்புரட்டு என்று நான் சொல்லுவதற்குரிய ஆதாரங்கள் என்ன? அவைகளை நாம் தேவனுடைய வார்த்தையிலிருந்து, இக்காலத்திற்குரியச் செய்தியிலிருந்து இங்கு காண்போம். தேவவாக்கியம் இதுகுறித்து ***ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே*** என்று கூறுகிறது, வெளி. 10:6 ***ஏழாம் தூதனுடைய நாட்களிலே என்று கூறவில்லை.*** இன்று ஏழாம் தூதன் நம் மத்தியில் இல்லை. அவர் நித்திரையடைந்து விட்டார். ஆனால் தூதனுடைய சத்தம் உலகம் எங்கும் ஒளிநாடாக்களின் வாயிலாக இந்நாள்வரை தொனித்துக் கொண்டிருக்கிறது. நிச்சயமாக அது கர்த்தருடைய வருகை பரியந்தம், அதாவது மணவாட்டி சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை தொனித்துக் கொண்டே இருக்கும். ஏனென்றால் அந்த சத்தம் மணவாட்டியை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டு வருகிறது. ***இந்த சத்தம் 1 தெச 4:16-ல் கர்த்தருடைய வருகைக்கு முன்சென்ற ஆரவாரம் ஆகும். அதாவது இதோ மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்ற செய்தியாகும். மத் 25:16.*** இந்தச் செய்தியினால் புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகள் தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இந்தச் செய்தியாளன் இவர்கள் மத்தியில் இல்லை. ஆனால் அவர் கொண்டு

வந்த செய்தி இவர்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு வருகிறது. இவர்கள் செய்தியாளனைப் பார்க்க வேண்டிய தேவையில்லை. மாறாக செய்தியாளனுடைய சத்தத்தைக் கேட்டு, செய்தியைக் கேட்ட, ஆரவாரத்தைக் கேட்டு, தங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். ஏனெனில் சத்தம் (ஆரவாரம்) தூதனுடையது அல்ல. அது தேவனுடையது. தூதன் தேவனுடைய சத்தத்தை ஒரு செய்தியாக கொண்டுவந்தார். செய்தியானது செய்தியாளனுக்கு கொடுக்கப்பட்டது. செய்தியாளனுடையது அல்ல. அவர் ஒரு செய்தியை சுமந்துகொண்டு வந்தவரே.

28. இது குறித்து இக்காலச் செய்தி என்ன கூறுகிறது? கடைசி நாட்களில் ஒரு செய்தியாளன் வந்து ஜனங்களை முதற்பலனுக்கு, மூல விசுவாசத்துக்கு வழி நடத்தவான். எங்கள் மத்தியில் உள்ள மகத்தான செய்தியாளன், மகத்தான கிறிஸ்து, பரிசுத்த ஆவி தம்மை தெளிவுபடுத்தி, வார்த்தையைத் திறந்து கொடுத்து, அதை எங்களுக்கு வெளிப்படுத்தி தருகிறார். அவர்தாமே எங்களை மூல பெந்தெகொஸ்தே விசுவாசத்திற்கு வழிநடத்தும்படி அருள்புரிவாராக. (*எக்காளப் பண்டிகை*, பக்கம் 72, பத்தி 2. நாள் 19.07.1964).

29. இந்நாளுக்கான செய்தியை நான் கொண்டிருக்கிறேன் என்று நான் நம்புகிறேன். இதுவே இந்நாளுக்கான வெளிச்சம் என்று நான் நம்புகிறேன். இது வரப்போகிற அந்த நேரத்தை சுட்டிக்காட்டுகிறது என்று நான் நம்புகிறேன். கர்த்தருடைய தூதன் வந்து ***நீ கொண்டிருக்கும் அந்த செய்தி என்று அறிவித்த செய்தி.*** அதாவது செய்தி ஒன்று வரும், செய்தியாளன் ஒருவர் வருவார். அது ஒரு மனிதனாயிருக்குமானால், அது எனக்குப் பின் வருகிற ஒருவராக இருக்கும். பாருங்கள்? அது... ஆனால் நான் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் ***இந்த செய்தியானது இந்நாளுக்கான உண்மையான செய்தி. இதுவே கடைசி செய்தி.*** நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன் என்று காண்கிறீர்களா, சகோதரர்களே?.... நீங்கள் இதே செய்தியின் செய்தியாளர்கள். ( **கே.ப** 123, பத்திகள் 387 மற்றும் 391)

30. 1933–ம் ஆண்டு, ஜூன் மாதம், 15–ம் தேதி மதியம் ஒகியோ நதிக்கரையில் சகோ. பிரன்காம் சுமார் 500 பேருக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கவிருந்தார். மதியம் சுமார் 2 மணிக்கு 17வது நபருக்கு ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டிருக்கையில், ஒரு தெய்வீக வெளிச்சம் நதியின் அடுத்தப்பக்கம் விழுந்தது. அது ஒரு நட்சத்திரம் வானத்தில் இருந்து விழுந்ததுபோல இருந்தது. அதில் இருந்து மேலேபார் என்ற சத்தம் உண்டாயிற்று. தேவன அக்கினி ஸ்தம்பத்தில் காட்சியளித்தார். தேவன் இறங்கினார். யோவான் ஸ்நானன் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டது போல உன் செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் சென்று உலகத்தின் எல்லாப் பாகங்களுக்கும் போகும் என விளம்பிற்று. இது குறித்து ***இந்த வேதவாக்கியம் இன்றையதினம் நிறைவேறிற்று.*** என்ற செய்தியை (19.2.1965) பத்தி 143–145 வரை நீங்கள் தியானிக்கலாம்.

31. கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல, உன்செய்தி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருப்பது இந்தச் செய்தியே. அப்படியே கர்த்தருடைய தூதன் உரைத்தார். (கே.ப. 2:12 பக்கம் 100. பத்தி 384) அந்த தூதன் என்னிடம் ***கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாய் யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டதுபோல உன் செய்தி என்று கூறினார். நான் இந்தச் செய்தியை எடுத்துச் சொல்ல வேண்டும். அது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாய் இருக்கும். (இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல்***(1.6.1962.) பத்தி 58). உங்களுக்கு அது ஞாபகம் உள்ளதல்லவா? கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல உன் செய்தி... கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாய் இருப்பது இந்த செய்தியே. அப்படித்தான் கர்த்தருடைய தூதன் உரைத்தார். ***அந்த தூதனே கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல், நீ இந்தச் செய்தியுடன் அனுப்பப்பட்டிருக்கிறாய். இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும் செய்தியை அறிவித்தான். இப்பொழுது செய்தி*** (கே.ப.123, பத்தி 384 & 385)

32. A voice came that shook all around the places there, as John, the Baptist was sent to forerun the first coming of Christ, the Message that is given you will be forerunning the Second Coming of Christ. **Not that I would be the forerunner but the Message was the forerunning (Testimony of Willam Branham 10:2.1960)** *பாருங்கள், இங்கு சகோ. பிரன்காம் திட்டவட்டமாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி அவர் அல்ல மாறாக அவருக்கு கொடுக்கப்பட்ட செய்தியே என்று கூறுகிறார்.*

33. எலியாவின் பலத்திலே காட்சியளிக்க எழும்பும் ஒரு மனிதன் உண்டு (மல். 4:5–6. மாற். 9:13, வெளி. 10:6) அவன் காட்சியளிக்க எழும்புவான். அவனிடம் ஒரு செய்தி இருக்கும். அந்தச் செய்தி வந்து நேராக வார்த்தையுடன் ஒன்றுபடும். இந்த நேரத்திலே தான் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். (***இந்த வேதவாக்கியம் இன்றையத் தினம் நிறைவேறிற்று*** (19.2.1965) பத்தி 142)

34. அவர் என்னை நதிக்கரையில் சந்தித்து என்னிடம், ***நான் பெற்றிருக்கும் செய்தியானது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக திகழும் என்றார்...*** அப்பொழுது அந்த ஒளி பிரத்தியட்சமானது. நான் அங்கு நின்று கொண்டு அதை நேருக்கு நேராக கண்டேன். அங்கு நின்று கொண்டிருந்த நூற்றுக்கணக்கான மக்கள் அதைக் கண்டனர். அது கீழே இறங்கி வந்து, அந்த சத்தம் பேசினது (***இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல்***, 01.06.1962 பத்தி 42) முப்பத்திமூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர் அங்குள்ள நதியண்டை என்னிடம் கூறின விதமாக எல்லாமே அப்படியே நிறைவேறிவிட்டது. ஒருக்கால் நான் அதை செய்ய மாட்டேன். ஆனால் இந்தச் செய்தியானது இயேசுவை உலகத்துக்கு அறிமுகப்படுத்தும். ***யோவான் ஸ்நானன் அவருடைய முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டது போல இந்தச் செய்தியும் அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும்.*** யோவான்: உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான். யோ. 1:29. எனவே எல்லா வகையிலும் இது இணையாக உள்ளது. அது அப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியும். ***செய்தியானது போய் கொண்டிருக்கும்*** (*பார்வையைத் திருப்பி இயேசுவை நோக்கிப் பாருங்கள்* (29.12.1963) பக்கம் 4, முதல் பத்தி) ஆம், பிரியமானவர்களே செய்தியானது எடுத்துக் கொள்ளப்படுதல் வரைப் போய் கொண்டிருக்கும். ***செய்தியே கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடி.***

35. *சமீப நாட்களில் VGR லவோதிக்கேயா சபைக்காலம் என்ற தலைப்பில் ஒரு தமிழ் செய்திப் புத்தகம் வெளியிட்டுள்ளார்கள். அந்த புத்தகத்தின் உள் முதல் பக்கத்தின் அடியில் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் இருந்தது போல, நீ அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருப்பாய் என எழுதி, அந்த பத்திக்கு மேல் சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் போட்டோவை பிரசுரித்துள்ளார்கள்.*

*இது என்ன? இதுவும் பிசாசே இக்காலத்துக்குரிய செய்தியை* VGR *கூட்டிக்குறைக்கிறது. ஆதலால் அதை பிசாசு என்கிறேன்.*

36. அந்த தூதன் வந்து யோவான் பழைய ஏற்பாட்டை முடித்து இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்த அனுப்பப்பட்டது போல, உன் செய்தி அந்த தளர்ந்த முனைகளை ஒரு முடிவுக்கு கொண்டு வந்து, அவருடைய வருகைக்கு சற்று முன்பாக மேசியாவை அறிமுகப்படுத்தும் (***ஐயா, இது தான் முடிவின் அடையாளமா?*** பத்தி 363) பாருங்கள், உன் செய்தி மேசியாவை அறிமுகப்படுத்தும். அங்கு யோவான் ஸ்நானன் இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்துகிறான். ஆனால் இங்கு சகோ. பிரன்காம் அல்ல. மறாக அவர் கொண்டு வந்த செய்தி. இந்த 363வது பத்தியை மொழி பெயர்ப்பாளர்கள் சரியாக மொழி பெயர்க்கவில்லை. அவர்கள் ***உன் செய்தி*** என்பதை ***ஒரு செய்தி*** என மொழி பெயர்த்துள்ளார்கள். இது ஆங்கிலத்தில் your message என்று உள்ளது. இவர்களுடைய பழைய மொழிபெயர்ப்பில் ***உன் செய்தி*** என்று சரியாக உள்ளது (பழைய பதிப்பு பக்கம் 70, பத்தி 4) ஆனால் இந்த வெட்கக்கேடான புதிய மொழி பெயர்ப்பில் ***ஒரு செய்தி*** என்று உள்ளது. பொதுவாக பழைய மொழிபெயர்ப்பு, புதிய மொழி பெயர்ப்பு எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்ற பழமொழிக்கேற்றதுபோல் அமைந்துள்ளது.

37. ***இவர்கள் மதிகேடு இதோடு முடிந்து விடவில்லை.*** இன்னொரு இவர்களது மதிகேடான மொழிபெயர்ப்பை பாருங்கள். ***கடைசிகாலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்*** என்ற செய்தியில் (25.07.1965) 269–ம் பக்கம் ஆங்கிலத்தில் இவ்வாறாக இருக்கிறது. It was not the angel, his Message. இதை தமிழில் ***அது தூதன் அல்ல*** என்று மட்டும் மொழி பெயர்த்து ***அவனுடைய செய்தி*** என்பதை விட்டு விட்டார்கள். இப்படியாக எந்தச் செய்தியை எடுத்தாலும் மொழி பெயர்ப்பில் கூட்டுதல், குறைத்தல், தவறுகள், குறைபாடுகள் இல்லாமல் இல்லை. தவறு நடக்கத்தான் செய்யும் என்று குரு – சாமி வகுக்கப் பேசும்போது சிஷர்களுக்கு என்ன? கொண்டாட்டம் தானே!

38. *பிரியமானவர்களே, இந்தச் செய்தி தொகுப்பின் சாராம்சமே கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள் என்ற செய்தியில் பத்தி 269-ல் தான் அடங்கியிருக்கிறது. இந்த பகுதியைக் கீழே கொடுத்துள்ளேன். என்னைக் குறித்து நான் பேசிக் கொண்டேன் என்று நீங்கள் ஒருக்கால் நினைக்கலாம். நான் ஒரு சத்தமாக இருக்க விரும்புகிறேனேயன்றி, அதற்கும் எனக்கும் வேறு எந்த தொடர்பும் இல்லை. நான் மிருகங்கள் பிடிப்பவனாக ஆகவே விரும்பினேன். ஆனால் நான் இவ்விதம் இருக்க வேண்டும் என்று பிதாவானவர் சித்தம் கொண்டார். எனவே நான் இதைத் தெரிவிக்கிறேன். இதை நான் அறிவிக்க தீர்மானித்து விட்டேன். அந்த நதியினிடத்தில் பிரதியட்சமானவர் நான் அல்ல. அவர் பிரதியட்சமாகும் போது நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். இந்த அற்புதங்களையெல்லாம் செய்பவன் நான் அல்ல. வரப்போகும் காரியங்களை பிழையின்றி அறிவிப்பவன் நான் அல்ல. அவர் இத்தகையச் செயல்களை புரியும்போது நான் அவர் அருகில் இருக்கிறேன். அவர் என்னைத் தம் சத்தமாக உபயோகித்து வருகின்றார். என் மூலம் அவர் பேசுகிறதற்கென என்னை நான் அவருக்கு முற்றிலும் அர்ப்பணித்து விட்டேன். அது ஏழாம் தூதன் அல்ல! அது மனுஷகுமாரன் வெளிப்படுத்தலாகும். அது தூதன் அல்ல. அவனுடைய செய்தி (இந்த அவனுடைய என்பது தமிழ் மொழி பெயர்ப்பில் இல்லை. சாத்தான் மொழி பெயர்ப்பாளனுடைய கண்களைக் குருடாக்கிவிட்டான். எத்தனை திருத்தப்பபட்ட மொழி பெயர்ப்புகள் வந்துதான் பிரயோஜனம் என்ன?) மறைபொருளாயிருந்த தேவனுடைய இரகசியம் வெளிப்படுதலாகும். அது மனிதன் அல்ல. அது தேவன். தூதன் மனுஷகுமாரன் அல்ல. அவன் அவரால் அனுப்பப்பட்ட தூதன். மனுஷகுமாரன் எனப்படுவது கிறிஸ்து. அவரைத்தான் நீங்கள் புசித்து வருகிறீர்கள். மனிதனின் வார்த்தையைப் புசிக்கவில்லை. மனிதனின் வார்த்தைகள் தவறுதலாகிப் போக ஏதுவுண்டு. ஆனால் நீங்களோ என்றென்றைக்கும் தவறாத மனுஷகுமாரனின் சரீரமாகிய வார்த்தையைப் புசித்து வருகின்றீர்கள்.*

39. பிரியமானவர்களே, இப்பொழுது நீங்கள் புரிந்து கொண்டீர்களா? இந்த ஊழியம் மனுஷகுமாரனுடையது. மனுஷகுமாரன் ஒரு தீர்க்கதரிசி. ஏழாம் சபைக்காலத் தூதன் மனுஷகுமாரனை வெளிப்படுத்தினபடியால் அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார். இன்று செய்தியைக் கொண்டு வந்தவர் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்து விட்டார். ஆனால் செய்திக்குரியவரை, செய்தியை நாம் புசித்துக்கொண்டு நம்மை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டு வருகிறோம். The man (The messenger) is gone home, but the Ministry continues since it is Christ's Ministry.

40. இப்பொழுது தமிழில் தீர்க்கதரிசியின் செய்தி என ஒன்று வெளிவந்துள்ளது. அதன் தலைப்பு ***பதினோராவது கட்டளை.*** (Eleventh Commandment). இந்த செய்தியானது சகோ. பிரன்ஹாமினால் மார்ச் 2, 1960–ல் பிரசங்கிக்கப்பட்டது என எழுதியுள்ளார்கள். இது தவறு. இது குறித்து WBGNS இடம் விளக்கம் கேட்டேன். அவர்கள் இந்த செய்தியை VGR செய்தி CD–யிலிருந்து எடுத்தோம் எனக் கூறினார்கள். 03.09.2007 அன்றே VGRவுடன் தொடர்புகொண்டு அவர்களையும் கேட்டேன். அவர்கள் அப்படி எங்கள் CD–யில் இல்லவே இல்லை எனக்கூறிவிட்டார்கள். எனது கணினியில் பார்த்தேன், WBGNS சொன்னபடி அந்த தேதி அங்கு காணப்படவில்லை. VGR சொன்னதே சரியாக தோன்றினது.

41. ஆக இந்த செய்தி எங்கிருந்து, எப்படி வந்தது என இருவரிடமும் கேட்டேன். இருவரும் அந்த காலத்தில் Eleventh Commandment என்ற ஒரு ஆங்கில செய்தி புத்தகம் இருந்தது. அவ்வளவுதான் எங்களுக்கு தெரியும். ஆனால் அது சகோ. பிரன்ஹாம் பிரசங்கித்த செய்தி அட்டவணையில் இல்லை என VGR உறுதிப்படுத்தினார்கள். ஆனால் WBGNS இந்த செய்தியை நாங்கள் VGR சி.டியிலிருந்து எடுத்து தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டோம் எனக் கூறினார்கள். ஆனால் இருவருக்கும் அப்படிப்பட்ட ஒரு செய்தியை சகோ. பிரன்ஹாம் பிரசங்கித்தாரா அல்லது இல்லையா என்பது குறித்து எதுவும் தெரியவில்லை.

42. ஆனால் எனக்கோ இப்படிப்பட்ட ஒரு செய்தியை சகோ. பிரன்ஹாம் பிரசங்கித்த செய்தி அட்டவணையில் இல்லை என்பதுதான் தெரியும்.

43. மேலும், WBGNS எழுதியுள்ளபடி இந்த செய்தி மார்ச் 2, 1960–ல் பிரசங்கிக்கப்படவில்லை என்பதும் உறுதி.

44. அடுத்து இந்த செய்தியில் அத்தியாயம் 1–ல் ***அன்பு வெளிகாண்பிக்கப்படுகையில்*** என உள்ளது. (When love projects). என்னிடம் உள்ள The William Branham Library வெளியிட்ட சகோ. பிரன்காமின் செய்தி அட்டவணையை நான் பார்த்த போது இந்த தலைப்பில் சகோதரன் ஐந்து செய்திகள் பிரசங்கித்துள்ளார். இரு செய்திகள்

1956–லும், மூன்று செய்திகள் 1957–லும் பிரசங்கித்துள்ளார். இதில் ஏதாவது ஒரு செய்தியின் தலைப்பை *பதினோறாவது கட்டளை* என மாற்றியுள்ளார்களா என்பதையும் விபரமாக ஆராய்ந்து பார்த்தேன். அப்படி ஒன்றும் தெரியவில்லை.

45. முடிவாக, இந்த *பதினோறவது கட்டளை* என்ற செய்தி எங்கிருந்து எப்படி வந்தது என VOGR சென்னை, WBGNS சென்னைக்கு தெரியவில்லை. ஆனால் இந்த செய்தியை ஆங்கிலத்தில் Eleventh Commandment என வெளியிட்டபோது WGBNS செய்தி கொடுக்கப்பட்ட தேதியை வெளியிடவில்லை. ஆனால் இன்று தமிழ் மொழிபெயர்ப்பில் செய்தி மார்ச் 2, 1960–ல் பிரசங்கிக்கப்பட்டது என வெளியிட்டுள்ளார்கள். ஆனால் அதற்கு ஆதாரம் அவர்களால் கொடுக்க முடியவில்லை.

46. இப்பொழுது இந்த செய்தியில் எழுந்துள்ள பிரச்சனை என்னவென்றால், இந்த செய்தியில் இரு அத்தியாயங்கள் உள்ளன. முதல் அத்தியாயத்தில் *அன்பு வெளிகாண்பிக்கப்படுகையில்* என்ற தலைப்பில் செய்தி உள்ளது. ஆனால் இந்த செய்தி தீர்க்கதரிசியின் செய்திகள் அட்டவணையில் எங்கும் இல்லை. அடுத்து, இரண்டாவது அத்தியாயம் Go ye up again என்ற தலைப்பில் உள்ளது. இந்த செய்தியில் திருமதி. வெஸ்லி இவ்லேய் என உள்ளது. சகோ. பிரன்ஹாம் கொடுத்ததாக கூறப்படும் *பதினோறாவது கட்டளை* என்ற செய்திக்குள் அவருடைய செய்தி முடிந்தபின் இந்த சகோதரியினுடைய சாட்சிப்பகுதி எப்படி உள்ளே வந்தது? இந்த சகோதரியின் சாட்சிப்பகுதி *பதினோறாவது கட்டளையின்* இரண்டாவது அத்தியாயமாக ஏன், எதற்காக, யாரால் நுழைக்கப்பட்டது?

47. இந்த செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பில், இதன் பத்திகளின் எண்ணிக்கைகள் ஒழுங்கும் கிரமமுமாக கொடுக்கப்படவில்லை.

48. அடுத்து செய்தியில் 32–வது பக்கத்தில் முதல் பத்தியின் ஆரம்பம் கீழ்கண்டவாறு. சகோதரன் பிரன்ஹாம் அப்பொழுதுதான் *நாங்கள் இயேசுவைக் காண விரும்புகிறோம்* என்ற பிரசங்கத்தை முடித்திருந்தார். மக்கள் கூட்டம் ஆழ்ந்த அமைதியில் இருந்தது. ஒருவர்கூட அசையவில்லை. காதோடு காதாக பேசும் சத்தம் கூட கேட்கப்படவில்லை. தேவன் பேச எத்தனிக்கும்போது ஒரு பரிசுத்த அமைதியை வரவிடுகிறார்! மிக மிருதுவாக பேசிக்கொண்டிருந்த சகோதரன் பிரன்ஹாம் கூட திடீரென்று பேசுவதை நிறுத்திவிட்டார்! அப்பொழுது சடுதியாக கட்டிடத்தின் மாடியிலிருந்த வரிசையிலிருந்து ஒரு சத்தம் கேட்டது. ஒரு ஒலிபெருக்கி கருவிகூட தேவைப்படவில்லை. ஏனெனில் தேவன் ஒவ்வொரு செவியையும் திறந்ததுபோல காணப்பட்டது. காற்றலைகள் அங்கிருந்து எல்லாருடைய செவிக்கும் இருதயத்துக்கும் நேரடியாக கொண்டு சென்றது. என்னுடைய ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டபடி வார்த்தைக்கு வார்த்தை நான் அதை சரியாக மேற்கோள் காட்டட்டும். (கட்டிடத்தின் மாடி வரிசையில் இருந்து ஒருவர் தீர்க்கதரிசனம் உரைத்ததை இந்த சகோதரி இவ்வாறாக வர்ணிக்கிறார் எனத் தெரிகிறது.)

**49.** *என் ஜனத்துக்கு கர்த்தராகிய நான் உரைக்கிறதாவது, நான் அனுப்பியுள்ள என் ஊழியக்காரனை உங்களுக்கும் இந்த சந்ததிக்கும் நான்தான் அவனை உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன் என்று உங்களை உறுதிப்பாடாக நம்ப செய்யும்படிக்கு பவுலை போல இவரும் தைரியமாக பேசுவார். ஆம், நான் என் ஊழியக்காரன் பிரன்ஹாமை அனுப்பியுள்ளேன். அவனுடைய வாயில் என்னுடைய வார்த்தைகளை நான் வைத்திருக்கிறேன். நான் என் குமாரனை மரிக்கத்தக்கதாக அனுப்பினேன். என் ஜனங்களோ அவரை புறக்கணித்தார்கள். (இது இயேசு கிறிஸ்துவை குறிக்கிறதாக இருக்கிறது) நானும் என்னுடைய குமாரன் பிரன்ஹாமை அனுப்பியிருக்கிறேன், உங்களுடைய நாளிலே உங்களிடம் அவர் வந்திருக்கிறார். ஆம், அவர்கள் ஒன்று கூடியிருக்கின்றனர், அவர்கள் தங்களுடைய இரகசிய அறைகளிலே அவர்கள் சந்தித்து கொண்டனர். என் மக்களுடைய தலைவர்கள் ஒன்றுசேர்ந்து ஆலோசித்து உள்ளனர். அவர் மீது அவர்கள் தீர்ப்பையும் செலுத்திவிட்டனர். அவர்கள் தங்கள் இரகசிய அறையிலே நாம் அவரை புறக்கணிப்போம், அவரில் ஒரு குறையை நாம் கண்டுபிடிப்போம், அதை நம் மக்களுக்கு போதிப்போம், இதுவும்கூட பெயல்செபூல் தான் என்று அவர்களிடம் கூறுவோம். ஆம், அவரை அனுப்பினது கர்த்தருடைய ஆவி அல்ல என்று பேசியிருக்கிறார்கள். ஆகவே உங்களிடம் அனுப்பியுள்ள என் ஊழியக்காரன் பிரன்ஹாமைக்கொண்டு நான் அவர்களை நியாந்தீர்ப்பேன். (இந்த தீர்க்கதரிசனம் சகோ. பிரன்காமை இயேசு கிறிஸ்துவோடு ஒப்பிடுவதாக உள்ளது. ஆதலால் இந்த தீர்க்க தரிசனம் பிசாசு)*

**50.** இங்கும் எழும்பும் கேள்வியானது தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷனுக்கு / ஊழியக்காரனுக்கு விரோதமாக சிலர் எழும்பும்போது தேவன் அவர்களை அந்த ஊழியக்காரர்களைக்கொண்டு நியாயந்தீர்ப்பாரா? இதற்கு வேதவாக்கியங்களில் ஆதாரங்கள் எதுவும் உண்டா? இல்லை என்பது என் கருத்து. நியாயத்தீர்புக்குறித்து முதலாவது நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது: நியாயத்தீர்ப்பு தேவனுடையது. உபா. 1:17. அவனவனுடைய நியாயம் கர்த்தராலே தீரும். நீதி. 29:26. பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று 1 கொரி 6:2 கூறுகிறது. இதோடு மட்டுமல்ல, அவர்கள் தேவதூதர்களையும் நியாயந்தீர்ப்பார்களென்று 6:3–ல் வாசிக்கிறோம். மேலும் *பரிசுத்தவான்கள் ஜனங்களை தண்டிக்க எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் மேல் செலுத்துவார்கள் என சங் 149:7-ல் காண்கிறோம்.*

51. அடுத்து நியாயத்தீர்ப்பு நாளில் தென்தேசத்து இராஜஸ்திரி இந்த சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றம் சுமத்துவாள் என இயேசு கூறினார். மத் 12:42. அவ்வண்ணமாகவே சகோ. பிரன்ஹாமும், இந்த ஜனங்கள் மீது குற்றம் சுமத்துவார். ஆனால் அவரைக்கொண்டு அவர்களை நியாயந்தீர்க்கமுடியாது. வெளி 20:4–ல் நியாயத்தீர்ப்பு கொடுக்கும்படி உட்கார்ந்தார்கள் எனக்காண்கிறோம். இவர்கள் யார்? சகரியா 14:5–ல் கூறப்பட்டுள்ள பரிசுத்தவான்கள். He came with His saints, ten thousands times ten thousands ministered to Him – His Wife, then judgement was set (Q & A 188)

52. *மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவது என்ன? மேலும் ஒரு நாளை குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்கிறான் (அப்.17:31) இந்த மனுஷன் யார்? இயேசுகிறிஸ்து. ஆக தேவன் பூலோகத்தை இயேசுகிறிஸ்துவைக் கொண்டே நீதியாய் நியாயந்தீர்க்கப்போகிறார். அவர் பிரன்ஹாமை கொண்டு யாரையும் நியாயந்தீர்க்க முடியாது. நியாயந்தீர்க்கபோவதுமில்லை. பிரியமானவர்களே இப்படிப்பட்ட சாட்சிகளையெல்லாம் நம்பி மோசம்போகாதீர்கள்.* VGR, WBGN. Bible Believers *இக்காலத்திற்குரிய செய்தியை பரிபூரணமாக உங்களிடம் கொண்டுவருவது இல்லை. அவர்கள் கொண்டு வருவதில் கூட்டலும் குறைத்தலும் உண்டு. ஆதலால் இவர்களையும் நம்பி மோசம்போகாதீர்கள். இது கொடிதான வஞ்சிப்பின் காலம்.*

53. சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். 2 கொரி. 5:10 இங்கு கிறிஸ்து பிரன்ஹாமைக் கொண்டு நியாயந்தீர்ப்பது இல்லை. கிறிஸ்து தாம் சொன்ன வசனங்களைக் கொண்டு அவர்களை நியாயந்தீர்க்கிறார். தியானியுங்கள் யோ.12:47,48.

54. மேலும் பவுல் என் சுவிசேஷத்தின்படியே தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்பு கொடுக்கும் நாளிலே இது விளங்கும் என்கிறான் (ரோ. 2:16) என் சுவிசேஷம் என்பது அவனுடைய சுய சுவிசேஷம் அல்ல. இந்த சுவிசேஷத்தை குறித்து அவன் என்ன கூறுகிறான்? சகோதரரே என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படி ஆனது அல்ல. நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதும் இல்லை, மனுஷனால் கற்றதும் இல்லை. இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார் என்கிறான். (கலா. 1:11 & 12) ஆக பவுல் என் சுவிசேஷம் என்று கூறுவது கிறிஸ்துவின் சுவிசேஷம் (ரோ.1:16) ஆக ***தேவன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தின்படியே இந்த கிறிஸ்துவைக்கொண்டு மனுஷர்களை நியாயந்தீர்க்கிறார். பிரன்ஹாமை கொண்டு அல்ல.***

55. மேலும் பக்கம் 39–க்கு வந்தால் அங்கு மற்றொரு வேற்றுமையான காரியத்தையும் நீங்கள் காணலாம். அதாவது சகோ. பிரன்ஹாம் ஜெபிக்க, குருடாய் இருந்த ஒரு பையன் டோனி பார்வை பெறுகிறான். அவன் தாய் வலியிலிருந்து சுகம் பெறுகிறாள். மற்றும் அவனுடைய தந்தை மற்றும் பாட்டியும் தங்கள் தங்கள் வியாதியிலிருந்து குணம் அடைகிறார்கள். இதை கட்டிடத்தின் பின்புறத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்த சகோதரி அருமை கர்த்தாவே, அருமை கர்த்தாவே, ***ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான் என்று எழுதியிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை*** என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டார்களாம். இங்கு ஒரு சிறு பையன் (Small child) என்பது ஏசா 11:6–ல் இருந்து கொடுக்கப்பட்டுள்ளது. ஏசா 11:6 ஆயிரம் வருட அரசாட்சி சம்பவத்தைக் குறிக்கிறது. சகோ. பிரன்ஹாமை அந்த சிறு பையனோடு ஒப்பிடலாமா? இதுவும் ஒரு தவறான கருத்துதானே, எண்ணம்தானே, சிந்தைதானே. அந்த சிறுபையன் (Small Child) கிறிஸ்துவைக் குறிக்கிறதாக இருக்கிறது. இப்படியாக ***இந்த சாட்சிப் பகுதியில் தாறுமாறுகள் காணப்படுகின்றன. அவைகள் கிறிஸ்துவினுடைய சரீரமாகிய சபை பக்தி விருத்தி அடைய பிரயோஜனப்படாது. மாறாக அது பலர் இடறுகிறதற்கு ஏதுவாகவே இருக்கிறது. இப்படிப்பட்ட தாறுமாறான சாட்சிகளை இக்காலத்திற்குரிய செய்தி எனக்கூறி அத்துடன் இணைப்பது விசுவாச துரோகம் ஆகும். பிசாசின் வஞ்சகம் ஆகும். இதற்கு உடந்தையாக*** VGR. WBGNS ***மற்றும்*** Bible Believers ***இருக்கிறது.***

56. முடிவாக இந்த செய்தி வெளிவர சென்னை ஏல்பெத்தேல் ஜெபவீடு செலவு செய்த பணம் பிசாசின் கணக்கில் சென்றது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு இதனால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. மாறாக உலகப் பிரகாரமான சென்னை, ஏல்பெத்தேல் ஜெபவீட்டிற்கே பிரயோஜனமாக இருக்கிறது.

57. இக்காலத்திற்குரிய செய்தியை பாதுகாக்கவேண்டிய வேலிகளாக VGR, WBGNS மற்றும் Bible Believers போன்றவைகள் இருந்தாலும், இந்நாட்களில் இவைகளை முற்றிலுமாக நாம் நம்பமுடியவில்லை. ஏனென்றால், அவைகள் பயிர்களையே மேய ஆரம்பித்துவிட்டன. பொதுவாக ***இந்நாட்களில் ஊழியமானது ஒரு சுகபோக வாழ்க்கையாகவும், அதற்கு தேவையான பண வசதிகளைக் கொண்டுவரும் வர்த்தகமையமாகவும் மாறிவிட்டது.*** இவைகளிலிருந்து நீங்கள் உங்களை காத்துக்கொண்டு, கறையற்றவர்களும், பிழையற்றவர்களுமாய் சமாதானத்தோடே தேவனுடைய சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள். ***எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று;*** ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, இக்காலத்திற்குரிய செய்தியைவிட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த சிரத்தையுடன் கவனித்து, அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள். நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையில் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

கிறிஸ்துவின் அன்பில்
சகோ. காலேப் யோசுவா

அக்டோபர் – 2007